ශ්‍රී ලංකා ප්‍රජාතාන්ත්‍රික සමාජවාදී ජනරජයේ ගැසට් පත්‍රය

අති විශෙෂ

# இலங்கைச் சனநாயக சோசலிசக் குடியரசு வர்த்தமானப் பத்திரிகை

அதி விசேஷமானது

අංක 2115/45 - 2019 මාර්තු මස 22 වැනි සිකුරාදා - 2019.03.22

*2115/45 ஆம் இலக்கம் - 2019 ஆம் ஆண்டு மாச்சு மாதம் 22 ஆந் திகதி வெள்ளிக்கிழமை*

(அரசாங்கத்தின் அதிகாரத்துடன் பிரசுரிக்கப்பட்டது)

## பகுதி I : தொகுதி (I) - பொது

## அரசாங்க அறிவித்தல்கள்

*ச. வ. பி. 21/78* (XVI)

***1978 ஆம் ஆண்டின் 16 ஆம் இலக்க, பல்கலைக்கழகங்கள் சட்டம்***

*1978 ஆம் ஆண்டின் 16 ஆம் இலக்க, பல்கலைக்கழகங்கள் சட்டத்தின் 18 ஆம் பிரிவின்கீழ், பல்கலைக்கழக மானியங்கள் ஆணைக்குழுவினால் ஆக்கப்பட்ட கட்டளைச் சட்டம்.*

செயலாளர்,
பல்கலைக்கழக மானியங்கள் ஆணைக்குழு.

கொழும்பு,
*2019, மாச்சு 21.*

கட்டளைச் சட்டம்

*1.* இக்கட்டளைச் சட்டம் 2019 ஆம் ஆண்டின் 1 ஆம் இலக்க, பட்ட வகுப்புக்கு மேற்பட்ட மருத்துவக் கல்வி நிறுவகத் (திருத்தக்) கட்டளைச் சட்டம் என எடுத்துக்காட்டப்படலாம் என்பதுடன் வர்த்தமானியில் வெளியிடப்பட்ட தேகதியன்று நடைமுறைக்கு வருதலும் வேண்டும்.

*2.* இரண்டாயிரத்துப் பதினெட்டாம் ஆண்டு பெப்புருவரி மாதம் 23 ஆந் திகதிய 2059/53 ஆம் இலக்க, அதிவிசேட வர்த்தமானியில் வெளியிடப்பட்ட கட்டளைச் சட்டத்தின் மூலம் கடைசியாகத் திருத்தப்பட்டவாறான 1980 ஆம் ஆண்டு ஏப்பிறல் மாதம் 10 ஆந் திகதிய 83/7 ஆம் இலக்க, அதிவிசேட வர்த்தமானியில் வெளியிடப்பட்ட 1980 ஆம் ஆண்டின் 1 ஆம் இலக்க, பட்ட

வகுப்புக்கு மேற்பட்ட மருத்துவக் கல்வி நிறுவக கட்டளைச் சட்டம் ஆனது அதன் 10 ஆம் பந்தியினை நீக்கிவிட்டு அதற்குப் பதிலாகப் பின்வருவதனை இடுவதன் மூலம் இத்தால் மேலும் திருத்தப்படுகின்றது.

(1) அதன் 6 ஆம் பந்தியினை நீக்கிவிட்டு அதற்குப் பதிலாகப் பின்வருவதனை இடுவதன் மூலமும் -

"6. பின்வருவோர் நிறுவகத்தின் அலுவலர்களாக இருத்தல் வேண்டும் :-

(அ) நிறுவகத்தின் பணிப்பாளர் (இதனகத்துகப் பின்னர் "பணிப்பாளர்" எனக் குறிப்பீடு செய்யப்படும்) ;

(ஆ) நிறுவகத்தின் பிரதிப் பணிப்பாளர் (இதனகத்துப் பின்னர் "பிரதிப் பணிப்பாளர்" எனக் குறிப்பீடு செய்யப்படும்) ; அத்துடன்

(இ) எந்தப் பதவியை வகிப்பவர் இப்பந்தியின் நோக்கத்துக்காக அலுவலரொருவராக உள்ளாரோ அந்தப் பதவியாகவுள்ளதென கட்டளைச் சட்டத்தினால் வெளிப்படுத்தப்பட்ட வேறு ஏதேனும் பதவியை வகிப்பவர் ; அத்துடன்

(2) அதன் 10 ஆம் பந்தியினை நீக்கிவிட்டு அதற்குப் பதிலாகப் பின்வருவதனை இடுவதன் மூலமும் -

"1. (1) (இதனகத்துப் பின்னர் "சபை" எனக் குறிப்பீடு செய்யப்படும்) முகாமைச் சபையானது நிறுவகத்தின் கல்விசார் குழுவாகவும், நிறைவேற்றுக் குழுவாகவும் இருத்தல் வேண்டும் என்பதுடன் அது பின்வரும் ஆட்களைக் கொண்டிருத்தலும் வேண்டும் :-

(அ) பின்வரும் பதவிவழி உறுப்பினர் ; அதாவது-

(i) பணிப்பாளர் ;

(ii) பிரதிப் பணிப்பாளர் ;

(iii) உயர் கல்வி என்னும் விடயம் குறித்தளிக்கப்பட்ட அமைச்சரின் அமைச்சுச் செயலாளர் அல்லது அத்தகைய செயலாளரின் நியமத்தர் ;

(iv) சுகாதாரம் என்னும் விடயம் குறித்தளிக்கப்பட்ட அமைச்சரின் அமைச்சுச் செயலாளர் அல்லது அத்தகைய செயலாளரின் நியமத்தர் ;

(v) நிதி என்னும் விடயம் குறித்தளிக்கப்பட்ட அமைச்சரின் அமைச்சுச் செயலாளர் அல்லது அத்தகைய செயலாளரின் நியமத்தர் ;

(vi) சுகாதார சேவைகள் பணிப்பாளர் தலைமையதிபதி (இதனகத்துப் பின்னர் "பணிப்பாளர் தலைமையதிபதி" எனக் குறிப்பீடு செய்யப்படும்).

(ஆ) பின்வரும் வேறு உறுப்பினர்கள் அதாவது -

(i) சட்டத்தின்கீழ் தாபிக்கப்பட்ட பல்கலைக்கழகங்களின் மருத்துவக் கல்வி, மருத்துவ விஞ்ஞானங்கள், மருத்துவ மற்றும் இணைந்த விஞ்ஞானங்கள், சுகாதார கவனிப்பு விஞ்ஞானங்கள் பீடங்களைச் சேர்ந்த பீடச்சபையால் பெயர்குறித்து நியமிக்கப்பட்டவரும், ஒவ்வொரு பீடத்தின் நிரந்தர ஆளணியாகவுள்ள சிரேஷ்ட பேராசிரியர்கள், பேராசிரியர்கள் மற்றும் இணைப் பேராசிரியர்கள் இடையேயிருந்து அத்தகைய ஒவ்வொரு பீடத்தின் பீடச் சபையினால் தேர்ந்தெடுக்கப்பட்டவருமான உறுப்பினர் ஒருவர் ;

(ii) சட்டத்தின்கீழ் தாபிக்கப்பட்ட பல்கலைக்கழகங்களின் பல் விஞ்ஞான பீடங்களின் பீடச்சபையினால் பெயர் குறித்து நியமிக்கப்பட்டவரும் அத்தகைய ஒவ்வொரு பீடத்தின் நிரந்தர ஆளணியினராகவுள்ள சிரேஷ்ட பேராசிரியர்கள், பேராசிரியர்கள் மற்றும் இணைப் பேராசிரியர்கள் இடையேயிருந்து ஒவ்வொரு பீடத்தின் பீடச் சபையால் தேர்ந்தெடுக்கப்பட்டவருமான உறுப்பினர் ஒருவர் ;

(iii) பேரவைக்கான ஆணைக்குழுவினால் நியமிக்கப்பட்ட உறுப்பினர்களிடையேயிருந்து பல்கலைக்கழகப் பேரவையினால் பெயர் குறித்து நியமிக்கப்பட்ட இரண்டு உறுப்பினர்கள் ; அத்துடன்

(iv) கல்விசார், உயர் தொழில்சார், வர்த்தக, கைத்தொழில்சார் சட்ட, விஞ்ஞானஞ்சார் அல்லது நிர்வாகத் துறைகளில் சிறந்த சேவை வழங்கிய ஆட்களிடையேயிருந்து ஆணைக்குழுவினால் நியமிக்கப்பட்ட ஏழு உறுப்பினர்கள்.

(2) சபையானது, அதனால் கையாளப்படக்கூடியதான குறித்த நோக்கம் ஒன்று தொடர்பாக விசேட பரப்பொன்றில் அனுபவத்தையும் அறிவையும் கொண்டுள்ள எவரேனும் ஆளை குறித்துரைக்கப்பட்ட காலப்பகுதி ஒன்றிற்கு சபைக்கு சேர்த்துக்கொள்ளலாம் அவ்வாறு சேர்த்துக்கொள்ளப்பட்ட எவரேனும் ஆள் சபையின் உறுப்பினர் ஒருவராக இருத்தலாகாது என்பதுடன் சபையின் ஏதேனும் கூட்டத்தில் தீர்மானிக்கப்படவிருக்கின்ற ஏதேனும் விடயத்தின் மீது வாக்களிப்பதற்கான ஏதேனும் உரிமையையும் கொண்டிருத்தலாகாது. ஆனால் அவ்வாறு செய்வதற்கு சபையினால் தேவைப்படுத்தப்படுகின்றபோது அதன் கூட்டங்களுக்கு சமுகமளித்தல் வேண்டும்.”

*04-137*